<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 216/2021</u>

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 23–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு **சாட்சி–1(PW–1)–**ன் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.M.இளையராஜா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராஜேந்திரன் | ஊர் | : | கடுவெளி |
| த/பெ. | : | அம்மாசி | தொழில் | : | உதவியாளர் (ஓய்வு) |
| வயது | : | 67 | மாவட்டம் | : | தஞ்சாவூர் |

<u>23.07.2025</u>

**<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**(Crl.M.P.No.4689/2024– ன் 09.12.2024 ஆம் தேதிய உத்தரவின் பேரில், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்)**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1) எதிரிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனக்கு 1980 ல் திருமணம் நடந்தது. எனக்கு திருமணம் நடக்கும்போது எதிரிகளுக்கு சுமார் 4, 5 வயது இருக்கும். 1 வது எதிரிக்கு 5 வயதும். 2வது எதிரிக்கு 3 வயதும் இருக்கும் என்றால் சரிதான். நான் 1990 ல் சிறை துறையில் பணியில் சேர்ந்தேன். கோயம்புத்தூர் மத்திய சிறையில் உதவியாளராக பணிபுரிந்தேன். எனது குடும்பத்துடன் கோயம்புத்தூரில் தான் பணியில் இருந்தவரையில் வசித்தேன் என்றால் சரிதான். நான் மட்டும் வாரம் வாரம் ஊருக்கு வந்து எனது அப்பாவுடன் இருந்து விவசாயம் பார்த்தேன். நான் 2016 ல் பணி ஓய்வு பெற்றேன்.

2) நான் வாரம் வாரம் வந்து விவசாயம் பார்த்தாக சொல்லி பொய் சொல்கிறேன் என்றும், குடும்பத்துடன் கோயம்புத்தூரில் தான் வசித்தேன் என்றும். எனது தம்பிகளையோ பெற்றோரை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார் தேதி தெரியவில்லை. நான் தான் கொள்ளிவைத்தேன். நான் எனது தாயர் இறந்ததர்க்கு வரவில்லை என்றும் நான் தான் கொள்ளிவைக்க வேண்டும் என்றும் சொல்லி எதிரிகள் என்னை அழைத்து வந்தார்கள் என்றும். சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நானாக வந்தேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) 1, 2 எதிரிகள் எங்கு வேலைப்பார்கிறார்கள் என்றால் டாஸ்மார்க்கில் வேலைப்பார்கிறார்கள். எந்த கடை என்று எனக்கு தெரியாது. சம்பவ நடந்ததாக நான் சொல்லும் தேதியில் 1 வது எதிரி கும்பகோணத்தில் உள்ள டாஸ்மார்க்கிலும், 2 வது எதிரி செம்மங்குடி உள்ள டாஸ்மார்க்கிலும் பணிபுரிந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் 20.08.2018 இரவு 09.00 மணிக்கு நடந்தது. 09.00 மணிக்கு எதிரிகள் இருவரும் அவர்கள் பணிபுரியும் இடத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி அரிவாலை எடுத்துக்கொண்டு என்னை துரத்தி வந்தார் என்று நான் மிகை படுத்தி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மிகைப்படுத்தி சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் மிகைப்படுத்தி சொன்னதாக

போலீசில் சொல்லிவிட்டு தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) எதிரிகள் சுப்பிரமணியன் வீட்டை அடித்து நொருக்கியாதக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனக்கும் இடையே உரிமையில் வழக்கு நடந்து வருகிறது. 1 வது எதிரியின் மனைவி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் வேலைக்கு சேரும்போது எதிரிகளுக்கு 10, 12 வயது இருக்கும். நான் பணியில் இருந்த போது குடும்பத்தையும் சகோதரர்களையும் பராமரிக்காமல் பணி ஓய்வு பெற்ற பிறகு வந்து எதிரிகளுக்கு தொந்தரவு செய்வததோடு வழக்குகளும் மொட்டை பெட்டிசனும் போட்டு வருகிறேன் என்றால் இல்லை.

5) எனக்கு கடுவெளி காளியம்மன் கோவில் தெருவில் வீடு இல்லை என்றும் திருவையாறு காவேரி நகரில் புதிதாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது ஆதார் அடையாள அட்டையில் கடுவெளி முகவரி உள்ளது அதை தற்போது மாற்றினேன் அதற்கு முன்பு கோயம்புத்தூர் முகவரி இருந்தது. நான் வீடு கட்டுவதற்காக துரைராஜ் என்பவரிடம் கல் வாங்கினேன் என்றால் சரிதான். நான் அவரிடம் கல் வாங்கிய பணத்தை கொடுக்கவில்லை என்று துரைராஜ் மற்றும் அவரது மகன்கள் பிரட்சணை செய்தபோது இரண்டாவது எதிரி எனக்காக அந்த பணத்தை கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பணத்தை என்னிடம் 2 வது எதிரி கேட்டார் என்றும். அதை தர மறுத்து எதிரிகளை திட்டி பிரட்சணை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் உரிமையியல் பிரட்சணை உள்ளதால் பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) நான் இரவு 10.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்தேன். எனக்கு எந்த காதில் காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் இடது காதில் காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் 10.30 மணிக்கு சிகிச்சையில் சேரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானானக ஏற்படுத்திய காயத்திற்காக மருத்துவமனையில் சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
**திருவையாறு.**